1157

பதிவு எண்—M 5120 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தான

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் இளவழகனார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - SEP 1955
MADRAS
1157
3-14

கிளை--7 திருவலம், [illegible]; மன்மத ஆடி ௨௭ 12—8—55 தளிர்-45

குருகுலத்தின் குறிக்கோள்

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

மேன்மையும் புகழும்

வாழ்க்கை மேம்பாடும் புகழும், உலகத்தில் தோன்றியவர்கட்கு முக்கியமானவை; 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்பது ஆசிரியர் அறிவுரை. மேம்பாடு அடைந்தவர் புகழ்க்குரிய செயல்கள் செய்து புகழும் அடைதல் இயல்பு; இல்லையானால் அவர்க்குத் தாழ்வும் பழியும் வந்து சேர்தல் ஒருதலை!

மேம்பாடு என்பது வாழ்க்கையில் படிப்படியாய் அடைதற்குரியது. தொடர்பாகச் சேர்வதற்குரிய இம் மேம்பாட்டுப் பயன், தொடர்ந்த நன்னடத்தையினாலே தான் உண்டாகும் என்பது சொல்லாமலே விளங்கும். இடையிற் சிலகாலம் நடத்தை தவறினால், மேம்பாடு சிதையும்; சிதைவதோடு தாழ்விலும் இறக்கிவிடும். ஆதலால், ஒழுக்கத்தால் மேன்மையடைதலில் மக்கள் மிகவும் கருத்தாகவும் ஊக்கமாகவும் செய்கை கொள்ளுதல் வேண்டும் 'இல்லை ஒழுக்கமிலான் கண் உயர்வு' என்று முன்னும் ஆசிரியர் எதிர்மறையால் தெரிவித்தார்.

ஆயினும், 'உயர்வு' என்பதற்கும் 'மேம்பாடு' என்பதற்கும் பொருள் வேறுபாடு இல்லாமலில்லை. 'மேம்பாடு' என்பது, படிமுறையான வளர்ச்சியை—முன்னேற்றத்தை—உணர்த்தும்; உயர்வு என்பது, படிமுறைகளைக் குறிக்காமல், அடைய வேண்டிய உயர்ந்த நிலையைக் குறிக்கும்; சுருங்கச் சொன்னால், 'உயர்வு' என்பது வாழ்க்கையின் நோக்கத்தையும், 'மேன்மை' என்பது அந் நோக்கத்துக்கு வெற்றியுடன் மேன்மேற் செல்லும் போக்கையுங் காட்டி நிற்கும் என்று கூறலாம்.

படிமுறைப் போக்கிற் பலர் சிற்சில நிலைவரையிலாயினும் சென்றடைதல் கூடும்; ஆனால், முழுதுங் கடந்து தாம் குறிக்கொண்ட உயர்வை அடைதல் என்பது எல்லார்க்கும் இயல்வதன்று; அது, மிகச் சிலர்க்கே கூடும். அதனாலேதான் ஆசிரியர், 'இல்லை உயர்வு' என முன் செய்யுளில் உயர்வை எதிர்மறை முகத்தானும், 'எய்துவர் மேன்மை' என இச் செய்யுளில் உடன்பாட்டு முகத்தானும் கூறினார்.

தாம் பழிக்கு உரியரல்லராயினும் ஒழுக்கத்தவறுதலால் பழிக்குரியவராக உலகம் கருதிவிடுமாதலின், எப்படியும் பழி வந்தடைதல் உறுதியே என்பதற்காக 'எய்துவர் பழி' என்றே துணிவாகக் கூறினார்; தாழ்வையடைந்தே பழி எய்துவாராதலின், தாழ்வு, சொல்லாமலே பெறப்பட்டது.

ஒழுக்கத்தின்எய்துவர்மேன்மை;
இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை- ஒழுக்கத்தினால் மக்கள் உயர்வை அடைவர்; இழுக்கத்தின்-ஒழுக்கத்திலிருந்து தவறுதலால், எய்தாப் பழி எய்துவர்-அடைதற்குரியதல்லாத பழியையும் அடைவர்.

கீழ்மை யடைதலுடன் பழியையும் அடைவரென்க; எனவே, ஒழுக்கத்தினால் மேன்மை யடைதலுடன் புகழும் எய்துவ ரென்பது.

முன்னேற்ற முடையோர் புகழெய்துதலும், பழியுடையோர் வாழ்க்கையிற் பிற்போக்கெய்துதலும் இயல்பாதலின் அவ்வச் சொற்களாற் கூறினார்.

மேன்மை என்றது, இங்கு வாழ்க்கை மேம்பாடு. உண்மையில் தமக்கு அடுக்காத பழிகளும் தம்மைச் சேருமென்பதற்கும், ஒழுக்கத் தவறு என்னுங் குறைபாடு தாம் இதுகாறும் அடையாத குற்றத்தில் தம் நடத்தையை உண்மையிலேயே ஈர்த்தழிக்கும் என்பதற்கும் 'எய்தாப் பழி எய்துவர்' என்றார்.

படிப்படியாக வாழ்க்கை மேம்பாடடைவதற்குத் தொடர்ந்த இடைவிடாத-நன்னடத்தை காரணமாயிருத்தலின், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' எனப்பட்டது.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, ஆடி,	தளிர்
7	12-8-55 வெள்ளி.	45

அளவை செய்யும் அற்புதம்

இப்பொழுதெல்லாம் திரைப் பட உலகில் முவ்வளவைக் காட்சியை (Three Dimension) அடிக்கடி கண்ணுற்று மகிழும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சாதாரணமான படங்களில், தட்டையான உருவமாகத்தான் நாம் காண முடிகிறது. அவற்றின் பருமனைக் காண்கிறோமில்லை. ஆனால், முவ்வளவைக் காட்சியிலோ, "மனிதன்" என்றால், அவன் எந்தத் தோற்றத்தோடு விளங்குகின்றானோ, அவ்வாறே—பருமன், பிற அளவுகள்—யாவும் பொருந்த நம்முடன் பேசுவதுபோல், காட்டப்படுகிறது. முவ்வளவை என்றால் என்ன? வேறு பிற அளவைகளும் இருக்கின்றனவா?

ஆம்; முவ்வளவை மட்டுமல்ல; எழு வகை (Seven Kinds of Dimenisions) அளவைகள், இன்றைய அறிவியல் உலகிலே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உண்மையைத் துருவித் துருவி ஆராய்ந்தால், மேன் மேலும் இவற்றின் பெருமையை உணர்வோம். இவ்வளவைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதே ஓர் பேரின்பமாய்த் தோன்றும்.

ஒருவனை நோக்கி, "மரம் எப்படி இருக்கும்?" என்று கேட்டால் என்ன சொல்வான்? அவன் பார்த்தவரையில்,—மரத்தின் பட்டையையும், கிளைகளையும், இலைகளையும்—கண்ட அளவில்—மரம் இப்படி இருக்கிறது என்று கூறுவான். மரத்தின் உள்ளே செல்கள் (Cells) இருக்கின்றன; புரோட்டோப் பிளாசத்தை (Proto plasm) பார்த்தேன் என்று கூறுவான்? அவை அவன் கண்ணுக்கு நேரடியாகப் புலப்படுவதில்லையே. இவ்வாறு நேராகப் புலப்படாமல், ஆனால் இயக்கும் பொருளாக இலங்கி வருவதைத்தான் நான்காம் அளவை (Fourth Dimension) என்று கூறுவோம்.

இன்னும் சிறிது கூர்ந்து கவனிப்போம். பெட்டி ஒன்றை நோக்குவோம். அதன் நீளம் தான் (First Dimension)-முதலாம் அளவை எனப்படுவது. அகலம் இரண்டாம் அளவை; உயரம் மூன்றாம் அளவை. இப்படியே ஒவ்வொரு பொருளையும் எடுத்துக் கொண்டால், அப்பொருள்களின் பருமனே மூன்றாம் அளவையாய் இலங்கும். இதையே இன்றைய நவீன திரைப்படங்களில் முவ்வளவையாக (Three Dimension) காண்கிறோம்.

இப்படி ஒவ்வொரு பொருள்களிலும் இவ்வித ஏற்பாடு இயங்கி வருவது வியப்பன்றோ? கல் என்று சொன்னால், ஓர் உறுதியான பொருள் என்று கூறினால் மட்டும்போதாது பலப் பல கோடி அணுக்கள் நெருக்கப்பட்டதன் விளைவாகத் தோன்றிய வடிவமே கல் என்பது தான் விஞ்ஞானம் கூறும் விளக்கம். ஆனால் மேல் வாரியாகப் பார்த்தால், கல் தான் நமக்குத் தெரிகின்றது. அணுக்கள் தெரிவதில்லை. கண்ணுக்குப் புலப்படாத இந்த அணுக்களே நான்காம் அளவை. இன்னும் புரியவில்லையா?

மின்சாரக் கம்பி ஒன்றை நோக்குங்கள். அதன் வடிவம், நீளம், பருமன் முதலியன நமது கண்களுக்குத் தெரிகின்றன. விசையைத் தட்டிய மாத்திரத்தில் அதனுள் மின்சாரம் ஓடுகின்றது. ஓடும் மின்சாரத்தை நாம் காண முடிகின்றதில்லை. மின்சாரம் ஓடுகின்றது என்பதை விஞ்ஞானச் சொற்களின் மூலம் விளக்க வேண்டுமானால், "மின்சாரத் திறன், கம்பியின் ஒவ்வொரு அணுவிலும் பாய்ந்து அதனோடு உறவு கொண்டு, அடுத்த அணுவுக்குச் சென்று, இவ்வாறாகக் கம்பி நெடுக ஓடுகின்றது" என்று கூறவேண்டும். ஒவ்வொரு அணுவும் கடத்தியாகப் பயன்படுகின்றன. இந்த அணுத்திரளே—கம்பியின் உட்பகுதியே-நான்காம் அளவை எனப்படுவது. உட்பகுதியாகச் சென்ற திறன் (iuternally) பிறகு வெளிப்பட வேண்டுமல்லவா? வெளிப்படும் செயல் நிகழ்வதைத் தான் (External) ஐந்தாம் அளவை என்கிறோம்.

ஆக, ஒரு மின்சாரக் கம்பியின் நீளம் முதலளவை என்றும், அகலம் இரண்டாம் அளவை என்

றும், பருமன் மூன்றும் அளவை என்றும், உட்பொருள் நான்காம் அளவை என்றும், வெளிப்படுத்தும் பொருள் ஐந்தாம் அளவை என்றும் இதுவரை கண்டோம். மின்சார பல்பில் எரியும் இழை (Filament) ஒளியைக் கக்கும் போது, அதன் செயல், ஐந்தாம் அளவையாக வெளிப்படுகின்றது. பல்பின் கண்ணாடி, ஒளியைப் பரவச் செய்கின்றது.

இனி, ஆறும் அளவை (Sixth Dimension) யாவது யாது? சான்று ஒன்று காட்டுவல்: விதை ஒன்றை நட்டோம். என்ன வியப்பு! அது இலையாகிச் செடியாகி, பூத்து நிற்கிறதே! விரைவில் மாற்றமடைந்து நிற்கும் காட்சி அற்புதமே யன்றோ! இக்கோலந்தான் ஆறும் அளவையாகப் பரிணமிக்கின்றது. வளரும் செடி, மனித வளர்ச்சி ஆகிய மாற்றங்கள் யாவும் ஆறும் அளவையிலே அடங்குகின்றன. ஆனால் இவற்றினை வெறுங் கண்ணினால்தான் பார்க்க முடிவதில்லை.

எழாம் அளவை ஒன்று உண்டெனக் கூறினோம். செடி வளர்வதற்குச் சக்தி எங்கிருந்து வந்தது? மின்சாரம் உண்டாவது எப்படி? மனிதன் எதனால் வளர்ச்சி பெறுகிறான்?—"எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளால்" என்பது தான் விடை. அணுவினும் அணுவாய் அவன் நிறைந்து இயங்குகின்றான். இதை அறிந்தோ அறியாமலோ, இவ்வளவைகளின் அற்புதத்தைத் தெரிந்தோ தெரியாமலோ, ஆன்றோர்கள், "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று கூறிப் போந்தனர். அவர்கள் வாக்கு எவ்வளவு உண்மை!

—T. N. அருச்சுனன்.

பாவலரும் காவலனும்

(மணிமொழி)

காட்சி 1,

இடம்: புலவர் வெள்ளைக்குடி நாகனார் வீட்டுத் திண்ணை

உறுப்பினர்: புலவர், பொன்னன்.

புலவர்: வாராய் பொன்னா!

பொன்னன்: வணக்கம் பெரியீர்!

புலவர்: வாழ்க வையத்து வளமெலாம் பெற்றே;

பொன்: வழுதி கூடலில் நெடுநாள் தங்கி
உழவர் எங்களை மறந்தனிர் போலும்;

புலவர்: பழகிய சுற்றம் மறத்தல் ஒண்ணுமோ
அழகிய சோழர் பதிப்பிறந் தார்க்கு;
புலவர் தமிழும் பாண்டியன் அன்பும்
நிலைத்த கூடல் நிறுத்திய தென்னை;
நன்று, நண்பர் யாவரும் நலமோ!

பொன்: நலமே பெரும! வளவன் அருளால்;

புலவர்: வாழ்க செங்கோல் வாழ்க வளவன்
வானம் பொய்க்க வறண்ட நிலம்போல்
நன்னன் குடும்பம் நற்பொலி விழந்து
துன்னிய சுற்றம் சுழன்று வருந்த
என்னுற் றதன்பா எடுத்துரை யாயோ!

பொன்: தண்டமிழ் வேந்தே! தாழ்த்தா துரைப்பேன்
தண்புனல் காவிரி நன்னீர் ஊட்ட
இன்னுயிர் படைக்கும் செந்நெல் விளையும்
மங்கா வளமிகு மாநகர் இருந்து
செங்கோல் செலுத்தும் செவ்வியன் வளவன்
ஆணைமேற் கொண்ட அருந்திற லாளர்
வானைத் தடவும் மலையில் பொறித்த
வரிப்புலிக் கொடியோன் கிள்ளி வளவற்கு
இறைதந் திலனெனப் பிழையா நன்னன்
செந்நிலம் பறித்தனர் அண்ணலே ஈதல்
இன்பம் இழந்து துயர்பெற் றனனே!

புலவர்: இறைநேர்ந் திலனென நிலங்கைக் கொள்ளல்
முறையே யன்றோ நீஅறி யாயோ!

பொன்: செந்நாப் புலவ! இந்நிலம் வாழ
அந்நாள் பொய்யில் புலவன் வழங்கிய
அறத்தை யானும் மறுத்துரை செய்யேன்

இறைபிழை செய்யும் திறத்தோன் அல்லன்
இல்லோர் காக்கும் நல்லோன் நன்னன்
எல்லா உயிர்க்கும் நண்பன் கண்டீர்!

புலவர்: நாமும் அறிவோம் நல்லன் நன்னன்;

பொன்: மாமழை தந்த மேகம் வாழ்த்தி
மன்னன் குடையும் வாளும் வாழ்த்தித்
தீம்புனல் தந்த காவிரி வாழ்த்தித்
திங்கள் வாழ்த்திச் செங்கதிர் வாழ்த்திப்
பூம்புகார் அழகில் தோய்ந்து வாழ்த்திப்
புவியெலாங் களிக்க விழாக்கொண் டாடி
மாநிலம் ஊட்ட உழுபடை தாங்கி
மகிழ்ச்சி முகிழ்க்கப் பழனம் சேர்ந்து
அகல உழுதலின் ஆழ உழுதலே
சாலச் சிறந்ததென் றுள்ளங் கொண்டு
கீழ்மண் மேலதாய் மேல்மண் கீழதாய்க்
கிளறி நிலத்தை எருவும் ஊட்டி
வாழச் செய்யும் என்று வளர்த்த
நாற்றெலாம் ஊன்ற நன்னீர் பாய்ச்சி
நான்தந் திடுவேன் பொன்கதிர் என்னும்
நாற்றைத் தொன்மை முறையின் நட்டு
வானம் வறப்பினும் தான்வற் றாத
காவிரித் தண்புனல் காதலின் சேர்த்துப்
பாலின் நல்லோ ரிடையே புல்லர்
பதுங்கி வாழும் பான்மை போலும்
கூட்டிய நீரை ஊட்டிய உரத்தைக்
கூட்டி உண்டு கொழுத்த களையைப்
பார்த்துக் களைந்து பக்குவ மாகச்
சேர்க்கும் நெறியின் செழும்புனல் சேர்த்துப்
போற்றிய நெல்லும் நீட்டியது கதிரைப்
புவியோ ரெல்லாம் களித்தனர் கண்டே!

புலவர்: நீண்ட நல்லுரை ஆற்றி நெற்பயிர்
போற்றி வளர்க்கும் நெறியை விரித்தாய்;

பொன்: நற்றமிழ்ப் புலவ! நெற்பயிர் வளர்க்கும்
பெற்றி உரைக்கவோ அன்றே இவ்வுரை
வற்று வறுமை ஆற்றினில் விழுந்து
சுற்றமும் நட்பும் சுழலில் சிக்கி
உற்ற துயரம் நீக்கும் பண்பின்
நற்செயல் ஆற்றும் நன்னன் தன்னிலை
செப்ப இப்படி விரிவுரை செய்தேன்
குற்ற முளதேல் பொறுப்பீர் பெரியீர்!

புலவர்: நன்று பொன்னே இன்று நின்னுரை,
நன்னன் நிலையை நவில்வாய் கேட்பேன்.

நூறாண்டு வாழ...

'அருணன்'

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே, இன்று நாம் நிற்கிறோம். நாகரிகத்தின் பெயரால், உலகு எவ்வளவு தூரம் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கிறது என்பதை யறிய நமது உள்ளம் வேதனையடைகிறது. "நூறாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த மக்களைப் போல் நம்மில் ஒரு சிலரைக் காண்பது கூட அரிதாயிருக்கின்றதே" என்று கூறி அங்கலாய்க்கும் குரல்களைக் கேட்கிறோம். அளவு, வரையறை யின்றிப் பருத்திருக்கும் சதையுருவங்கள், கண்டவுடன் மயக்கம் போட்டு விழுமளவுக்கு எலும்புருவங்கள், போதிய வளர்ச்சியின்றிக் குன்றிக் கிடக்கும் உருவங்கள், இன்ன பிற உருவங்கள், நாடொறும் நமது காட்சிக்கு வருகின்றன. உடல் நன்கு கட்டு விட்டு, புயவலிமை பெற்று விளங்கிய— நூறு வயதிலும் நொறுங்கத் தின்னும் உரம் பெற்ற பற்களுடன் வாழ்ந்த—மக்களையும் மனம் நினைக்கிறது.

என் இந்த மாறுபாடு? இவ்வினவுக்கு ஒரே விடை—தகுதியான விடை-ஒழுங்கற்ற வாழ்க்கை என்பதே. "ஒழுங்கும் ஒழுக்கமும் வாழ்க்கையை உயர்த்தும்" என்பதை மறந்ததனால் வந்த வினை. இது உண்ண வேண்டும், இப்படி உண்ண வேண்டும் என்று உடலின் வலிவுக்குத் தக்கவாறு பகுத்துண்ணாதகாரணத்தால் ஒருவன் சதை மலையாகிறான். அரை வயிற்றுக்கும் எட்டாமல் கஞ்சி குடித்து வாழ்வதனால், உடல் ஒட்டி உலர்ந்து, எலும்புருவாகிறான் மற்றொருவன்.

இவையெல்லாம் போக்கி, மக்கள் நூறாண்டு வாழ என்ன வழி? வள்ளுவர் இதற்கு வழி கூறுகிறார்.

"மாறுபா டில்லாத வுண்டி
மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு"

பொன்: நாணித் தலைஇறைஞ்சும் பெண்டிர் போலப்
பேணி வளர்த்த நெற்பயிர் சாய்ந்து
காணும் வயலெலாம் நிற்கக் கண்டான்
வானை வாழ்த்தி வையகம் வாழ்த்தித்
தேனின் இனிய பண்ணைக் கூட்டித்
தீந்தமிழ்ப் பாட்டினை இசைத்து நாளும்
வருவிருந் தோம்பும் வாழ்க்கை பெற்றோம்
பொருந்திய சுற்றம் போற்றவும் இல்லோர்
வருத்தம் நீக்கவும் வண்டமிழ்ப் புலவர்
விரும்பும் வண்ணம் பெருநிதி கொள்ளவும்
செறுநரும் விழைந்து போற்ற நாடும்
பெரும்பொருள் கொள்ளத் தொண்டும் செய்தோம்
என்றிவ் வாறு இனைய பலவும்
அறம்பல ஆற்றி அருந்துயர் துடைக்கும்
நெறியில் படரும் நல்லோன் நன்னன்
எண்ணி மகிழ்ந்துடன் எழுந்தே ஆடிப்
பொன்னிற மனையாள் தன்னுடன் கூடித்
தன்னுளங் கொண்டது பகுத்துட னூட்டி
இன்புறு நாளில் இயற்கைப் பெண்ணாள்
நன்னனை வீழ்த்தச் செய்தனள் சூழ்ச்சி
சின்னஞ் சிறிய பூச்சிக் கூட்டம்
எழுந்தது அணியாய்ப் பறந்தது வானில்
விழுந்தது வயலெலாம் வீழ்ந்தன கதிர்கள்
அரம்போழ் வதுபோல் அறுத்தன தாளே
பெருந்தலை விழுங்கிட நிலத்தில் சாயும்
பொருநர் போலும் அருமணி இழந்து
விழுந்தன தரையில் மீண்டும் விடாது
குருதியைக் குடித்தே உயிரை வீழ்த்தும்
கழுகினம் போலும் கடித்து வீழ்த்தின
அழிந்தது அழிந்தது வயலெலாம் அழிந்தது
அழிந்தது நன்னன் எண்ணம் அழிந்தது
மெய்த்திறம் படர்வோன் வளமே அழிந்தது
இத்தனை அழிவும் ஓரிரா நடந்தது....

புலவர்: பொன்னா!

பொன்: நீண்முடி கொண்டோர் போற்றும் பாவல!
கேட்பீர் பின்னர் உற்றதும் உரைப்பேன்
கீழ்த்திசை எழுந்த ஞாயிறு நன்னன்
வாழ்வின் அழிவை விளக்கிக் காட்டப்
பாழ்செய்து விட்டேன் பாராய் நீயெனப்
பரவை இயற்கை வானில் ஏறி
மறைத்தனள் கதிரை இடிஇடி என்று
சிரித்தனள் பற்கள் ஒளிவிட்டு மின்னச்
சொரிந்தனள் கண்ணீர் இன்பப் பெருக்கால்
சொரிந்தது நன்னன் மனையெலாம் கண்ணீர்
சரிந்தது கோட்டை துகள் துகளாக....

[துக்கம் நெஞ்சடைக்க நிறுத்தல்.]

என்ற குறள் தெளிவாக விடை கூறுகிறது. நூறாண்டு வரை வாழலாம் என்று அவ்வு கூடக் குறிப்பிடாமல், "ஊறுபாடில்லை" என்று ஒரே யடியாக அடித்துப்பேசுகின்றது. அருமைத் திருக்குறள். மாறுபாடில்லாத உண்டி வேண்டுமாம்; உடல் நிலைக்கு மாறுபாடு இல்லாதது எது? உடல் சீதள நிலையில் இருக்கும் போழ்து தயிருணவு ஒருவன் புசித்தால் அஃது மாறுபாடான உண்டியன்றோ? எனவே, உடல் நிலைக்கு ஏற்ற முறையில், சீருணவை (**Balanced diet**) ஒருவன் புசித்து வந்தால்—இங்கே ஒரு கேள்வி எழுகின்றது. எவ்வாறு புசித்து வந்தால்?—அதற்கு விடையும் மேற்புகன்ற குறளிலேயே காணக் கிடக்கின்றது. "மறுத்து உண்ணின்" என்பதே அது. உணவு உண்ணும் போழ்து, மிக நன்றாயிருக்கிறது-நிரம்பவும் உருசியுள்ளது-என்று அளவின்றி உண்டால் என்ன ஆகும்? அளவுக்கு விஞ்சின், அமுதமும் நஞ்சன்றோ? எனவேதான் மறுத்து உண்ணின் என்று கூறினார். கொள்ளும் வரையறை தெரிந்து உட்கொள்க என்றார். அவ்வாறு உட்கொண்டால், ஊறுபாடே இல்லை என்று வரையறுக்கின்றார் வள்ளுவனார்.

இன்றைய உலகிலே, மருத்துவரின் (**Doctors**) தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. இதன் பொருள் என்ன? நோயாளிகளின் தொகை பெருகி வருகின்றது என்பதல்லவா? நோய் ஏன் வருகின்றது? மருந்து தேவைதானா? என்பன போன்ற கேள்விகட்கெல்லாம் வள்ளுவம்விடை

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

புலவர்: நிறுத்தல் ஏனோ தொடர்வாய் பொன்னா!

பொன்: கருங்கடல் மீது புலிக்கொடி பறக்க
அருங்கலம் சுமந்து வருங்கலம் கண்டு
ஆர்த்தனர் பரதவர் அரிதின் முயன்று
அரும்பொருள் அனுப்பிய பெருங்குடி வணிகர்
பெரும்பொருள் நோக்கி அமையாது நிற்க
கலத்தி லிருந்தோர் தளத்தில் எழுந்து
பலவகைக் குறியால் களிப்புக் காட்ட
இருவ ரிடத்தும் பொறுமை குன்றி
விரைதல் விருப்பே மிகுந்துளம் எழவும்
படீரெனக் கூம்பு முறிந்து பாய்மரம்
பாய்ந்திட நீரில் தோய்ந்த கலம்போல்
தீயது நல்லது என்றெலாம் பகுத்தாங்
காய்தல் இன்றி ஆடல் ஒன்றே
வாழ்வாய்க் கொண்ட பேய்வாய் பட்டு
வனப்புஇழந் தனவே வயலெலாம் நன்னன்
வாழ்வுஇழந் துள்ளம் பேதுற் றலைந்து
ஊழ்வலி தென்றே உரைத்தவர் தேறி
உழுபடை தனக்கே அடைக்கல மாகிச்
சூழ்ந்த துன்பம் துகளாய் எண்ணிச்
சுற்றம் வாழ்த்தத் தொழிலில் படிய
உழுதுணை உண்ட கடமை கேட்டுப்
பழுதில் வினைஞர் வந்தார் ஆங்கே
தொழுது நின்று நன்னன் தனக்கு
உற்றது எடுத்துச் சுற்றம் உரைக்க
அழுத கண்ணீர் துடைத்துக் கொண்டு
அரசன் ஆணை சான்றுடன் காட்டிக்
கலங்கிக் கையற்று மயங்கி நிற்கப்
புலம்பும் உள்ளம் கரைந்து நீராய்
நிலைத்த விழிகள் நிரப்பிக் கொள்ள
'நிலங்கைக் கொள்க!' என்றான் நன்னன்
பொலம்பூ முகத்துக் குழந்தைப் புலம்பல்
எழுந்தது ஒருதாய் மடியில் இருந்தே!

[பொன்னன் விம்மி அழல்]

புலவர்: நன்னன் நலிவை நீக்கு முயற்சி
இன்னே கொண்டேன் பொன்னா அழல்;
அன்னவன் தனக்குத் துணையாய் நிற்பாய்;
இன்றே கோநகர் சென்று நானும்
மன்னவன் காண்பேன் மாற்றுக துயரே!

பொன்: வணக்கம் ஐய!
வாழ்க மன்னவன்! வாழ்க வெண் குடையே!

[பொன்னன், நன்னன் வீடுநோக்கி விரைதல்]

(தொடரும்)

கூறுகின்றது. இந்நாளில் மதம் அவசியமா? என்ற கூக்குரலும் நம் காதில் விழுகின்றது. அதை மாற்றி, "மருந்து அவசியமா?" என்று கேட்டால் எவ்வளவு புதுமையாயும், பயனுள்ளதாயும் இருக்கும்? மருந்து தேவையில்லை என்று வள்ளுவம் கூறுகின்றது.

"மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு; அருந்தியது
அற்றது போற்றி யுணின்."

உண்ட உணவு செரித்தமையை உணர்ந்து உண்டால் மருந்தே தேவையில்லை. இக்காலத்து மருத்துவரையெல்லாம் விஞ்சி விடும் அளவுக்கு வள்ளுவர் இங்கே புரட்சி செய்கிறார். சாப்பிட்டது செரித்து மீண்டும் சாப்பிட்டு வந்தால் மருந்து என்று ஒன்று தேவையே யில்லை என்று கூறுமுகத்தான், இக்காலத்தில் பசியாதபோதே வீட்டை விட்டு, சிற்றுண்டிச்சாலை நுழையும் பேர் வழிகட்கும், கால வரையறை தெரியாமல் காபி குடிக்கும் கனதனவான்கட்கும் சாட்டையடி கொடுக்கின்றார். என்ன புதுமை! என்ன இனிமை!

"துவரப் பசித்து" உண்ணல் வேண்டும் என்று கூறும் குறள் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றது.

உணவு வளம் மட்டும் இருந்தால் நூறாண்டு வாழல் ஒல்லுமா? இயலாது. மனவளம் வேண்டும். கவலையற்ற வாழ்க்கை வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உளப்பான்மை ஒழிய வேண்டும். பொறாமைப் படும்பண்பு புதைபட வேண்டும். கோபமும் தாபமும் மறைய வேண்டும். வஞ்சம், அழுக்காறு, வெகுளி ஆகியவற்றை மண் மூடிப் புதைக்க வேண்டும். சாந்தம் ஓங்கி, தண்ணளி தழைத்து, ஒற்றுமை சிறந்து, மகிழ்ச்சி பொங்க வாழும் வாழ்க்கை வேண்டும். மனத்தைச் "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பால் உய்க்கும்" பான்மை'' வளர வேண்டும் இவை பொருந்தப் பெற்றால், நூறாண்டு ஒருவன் வாழ்வன் என்பதில் எட்டுணையும் ஐயம் உண்டோ?

நம் கருத்துக்கள்:

இந்திய ஆட்சியும் இந்தியும்

இந்தியா முழுவதும் ஒரே ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும். பிரிந்து போன பாகிஸ்தான் உட்பட அப்படி இருந்திருக்கிறது என்பதற்கு ஒரு மொழி வைத்துலகாண்ட இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன், கரிகாலன் முதலிய தென்தமிழ் நாட்டு அரசர்கள் வரலாறுகளும் சான்றாக இருக்கின்றன. வேறு அமைதிகளும் இதற்கு இருக்கின்றன.

எப்படியோ பாகிஸ்தான் பிரிந்துவிட்டது. எஞ்சிய இந்திய நாடாதல் ஒரே நாடாக இருத்தலே நல்லது. அதனை வலுப்படுத்துகிற முறையில் இந்திய அரசாங்கம் இயங்கவேண்டும்.

அதற்கு, இயற்கையானதும், வாழ்க்கை வளர்ச்சிக்கு அடிப்படையானதுமான மொழிவழி மாநில அமைப்பை ஒழுங்குபடுத்தி அவ்வம் மாநில ஆட்சி மொழியாக அவ்வவ்விடத்துத் தாய்மொழியே அமைத்து, மாநிலங்களின் உள்நலங்களுக்கான எல்லாவற்றையும் செய்து கொள்ளுகிற அதிகாரங்களையெல்லாம் அவ்வம் மாநில அரசுகளுக்கே கொடுத்து, பாதுகாப்பு; போக்குவரவு, வெளிநாட்டுத் தொடர்பு போன்ற சில பொது நிலைகளை மட்டுமே தாம் மேற்கொண்டு வெறும் அறங்காவல் (Trurxc shep) நிலையிலேயே இந்திய மத்திய ஆட்சி இருக்கவேண்டும்.

இப்போதிருக்கிற முறை எவ்வளவு நடுநிலையாக நடந்தாலும், ஐயங்களை உண்டாக்கி வளர்க்கிற முறையிலேயே இருக்கிறது. மத்திய ஆட்சிக்குமிகுந்த அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. மாநில அரசுகள் வரிவாங்கும் சாவடிகள் போலவே இருக்கின்றன. பெருவாரியான வருவாய் வரும் வரி இனங்கள் மத்திய ஆட்சிக்குச் சேர்கின்றன. மாநில அரசுகள் அடிக்கடி பண முடையிற் சிக்கி, மானிய உதவிகளுக்கு மத்திய ஆட்சியை அடிக்கடி நாடி அலமருகின்றன. அதனால் பிரிவினை உணர்ச்சி இயல்பாகவே கால் கொள்ளுகின்றது.

மொழிவழி மாநிலங் காணாததே மக்களிடையில் பற்பல ஐயங்களை உண்டாக்கிவிட்டிருக்கிறது. அதற்கான கிளர்ச்சிகளை அடக்கி வைப்பதிலும், செய்யக்கூடாது எனத் தம் கட்சிகளை அடக்கி வைப்பதிலும் மத்திய ஆட்சியில் செல்வாக்குள்ளவர்கள் மிக்க கருத்துச் செலுத்துவது பின்னும் அவ்வையங்களை வளர்க்கின்றது.

இந்நிலையில் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்பதில் மத்திய ஆட்சியினர் மிக்க கருத்திருத்தி ஏதொரு வளமுமில்லாத கொச்சை மொழியாகிய இந்தி மொழியைப் பெரும்பாலோர் பேசுகின்றார்கள் என்ற காரணங் காட்டிப் பொது மொழியாக்க முனைந்திருக்கின்றனர்.

இன்னும் மொழிவழி மாநிலம் அமையாமல், தாய் மொழி ஆட்சிகள் ஏற்படாமல் இருக்கிற நிலையில் இந்தி மொழியைப் பொது மொழியாக்க முனைவதனால் மேலே குறிப்பிட்ட ஐ நிலை மேலும் கொழுந்துவிட்டு எரிந்து விபரீதநிலையை அடைகின்றது.

உலக முழுவதும் ஒன்றாக இயங்கும் நிலையில் மனித நாகரிகம் வளர்ந்துவிட்ட இந்நாட்களில் பல மொழிகள் வழங்கும் ஒரு நாட்டில் ஓர் உள்நாட்டு மொழியைப் பொதுமொழியாக்குவதைவிட உலகப் பொதுமொழியையே தம் பொது மொழியாகக் கொண்டு, ஒவ்வொரு மொழியையும் அது அது வழங்கும் இடத்தில் ஆட்சி மொழியாக்குவதே எளியதும் இனியதும்—ஐயம் போக்குவதும் ஆகும்.

ஆங்கிலேயர் நம்மை அடக்கி ஆண்டதால் ஆங்கிலம் நமக்கு ஆகாத மொழி என்று கொள்ளாமல், அது இன்று உலகத்தில் பெற்றுள்ள செல்வாக்கையும், வளத்தையும், வெளிநாட்டுத் தொடர்புக்கு அது இன்றியமையாதிருப்பதையும், பழகிவிட்ட நிலையையும் எல்லாம் எண்ணி அதனையே பொது மொழியாகக் கொள்வதால் நன்மையே ஒழியத் தீமை ஏதுமில்லை.

அதை விட்டு (விடவே இயலவில்லை) இந்தியைக் கொணர்வதால் வரும் இன்னல்களை அரசியலார் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அப்படியே நமக்கென ஒரு பொது மொழி வேண்டும் என்று கொண்டாலும் அங்கங்கும் தாய் மொழிகளை ஆட்சி மொழியாக்கு முன் இந்திக்காக மேற்கொள்ளும் முயற்சிகள் வீணாவதோடு பெரும்பாலும் மத்திய ஆட்சிக்குக் கெடுதலையே விளைவிக்கும் என்பதை மக்கள் இயற்கைப் போக்கையும் இருக்கிற சூழ்நிலைகளையும் எண்ணிப் பார்த்தாலே யாரும் எளிதாக உணரலாம்.

மொழிவழி மாநில அமைப்பை விரைந்து செய்தால் மத்திய ஆட்சியின் வலிவை அது மிகுக்குமே ஒழியக் குறைக்காது. ஏனோ இதற்கு நேர்மாறாக இந்திய ஆட்சி கருதுகிறது.

வளமுள்ள ஆங்கில மொழியே 150 ஆண்டுகளுக்குப் பிறகும் நம் நாட்டில் நூற்றுக்கு 2—

பாணன் படும் பாடு

(உ. மா. துரைசாமி.)

அகப் பொருள் கற்பியலில், இல்வாழ்க்கை முதலாகப் பொருள் வயிற் பிரிதல் ஈறாக ஏழு வகைப் பிரிவு சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வேழு துறைகளுள் பரத்தையிற் பிரிவு என்பதும் ஒன்று.

தலைவன் பரத்தையிற் பிரிய்த் தனிமை யடைந்த தலைவி துன்பமுற்று வருந்துகிறாள். தலைவன் திரும்பி வாராமுன், பாணரில் பலர் தலைவியிடம் வந்து தலைவன் திரும்பி விட்டான் என்று சொல்லிப் பொன் பெற்றுப் போனார்கள். உண்மையாகவே, பரத்தையிற் பிரிந்த தலைவன் திரும்பி வந்துவிட்டான். வந்து, தனது வரவை உணர்த்தித் தலைவியின் ஊடலைத் தணிக்குமாறு ஒரு பாணனைத் தலைவியிடம் அனுப்புகிறான். பாணனும் வந்து தலைவன் வருகையைத் தலைவியிடம் தெரிவிக்கிறான். ஆனால் தலைவி நம்பவில்லை. ஏன்? இதே மாதிரி, பொன் பெறும் பொருட்டுப் பலபேர் வந்து சொல்லி ஏமாற்றி யிருக்கிறார்கள். இதை மனதிற் கொண்டு, தலைவனால் அனுப்பப் பட்ட பாணனை நோக்கித் தலைவி “இழிதகையான பாண! தலைமகன் வருவதை நீ கண்டனையோ, அல்லது பார்த்தவர்கள் சொல்லக் கேட்டு அறிந்தனையோ? இவற்றுள் (கண்டது அல்லது கேட்டது) ஒன்றைத் தேற விரும்பினோம் சொல்வாயாக. மிக்க பொன்னைப் பெறும் பொருட்டுக் காதலர் வருகையை எனக்கு உரைத்தலை நீ யார்வாய்க் கேட்டனை? என்று கேட்கிறாள். முந்தித் தன்னிடம்வந்து பலர் இவ்வாறு சொல்லிப் பரிசிலாகப் பெற்றதைப் போல் பொன் பெறுவதற்கு இதுவே தக்க சமயம் தக்கவழி என்று அவருள் யாரானுமொருவரிடத்துக் கேட்டறிந்து அந்தப் பாணன் (தலைவனால் அனுப்பப்பட்ட பாணன்) வந்திருக்க வேண்டுமென்று நினைத்து இவ்வாறு கேட்கின்றாள் தலைவி. வெண்மையான கொம்பையுடைய யானை எப்போதும் பல பூக்களையுடைய சுனையிலே படிகிறது போலவே, தலைமகனும் பல பரத்தையர் வாழும் சேரியிலேதான் தங்குவானன்றி இங்கு வாரான். பரிசிலாகப் பொன்னைப் பெறும்பொருட்டுக் காதலர் வருகையை எனக்கு உரைத்தலை நீ யார்வாய்க் கேட்டனை? அல்லது நீ கண்டனையோ? என்று தலைமகள் கேட்கின்றாள். நீ கண்டனையாயின் அவரைத் தனியே விட்டு நீமாத்திரம் வந்திருக்கமாட்டாய்; அதனால் கண்டார்க் கேட்டனையோ? அப்படியானால் யார்வாய்க் கேட்டனை என்றும் கேட்கிறாள். ஏனென்றால், சொன்னவனும் அவனைப்போல ஒரு பாணனாகத் தானே இருக்கவேண்டும் என்று நினைத்துக் கேட்கிறாள். இங்கே பாணன் படும் பாடு தெரிகிறதல்லவா? இப்போது பாட்டைப் பார்ப்போம்.

நீ கண்டனையோ?
கண்டாற் கேட்டனையோ?
ஒன்று தெளிய நசையினம்
மொழிமோ;
வெண்கோட் டியானை
பூஞ் 1சுனை படியும்
பொன்மலி 2பாடிலி
பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை
காதலர் வரவே

(குறுந்தொகை)

(பாட பேதம்) 1. சோணைபடியும்.
2. பாடலி.

மற்றோர் பதிப்பில் மேலே கண்ட பாட பேதங்கள் காணப்படுகின்றன. இந்தப் பாடபேதங்களின்படி “உனக்குரைத்தவர் கண்டது உண்மையாயின், எனக்குரைத்த நீயும் நினக்குரைத்த அவரும் யானை சோணையாற்றிற் படியும் பொன் மலிந்த பாடலி நகரத்தைப் பெறுக” என்றாள் என்பது பொருள். தலைவன் வரவு கண்டதாகக் கூறியவனும் ஒரு பாணன். இருவரும் பொய்யர் என்று எண்ணித் தன்னாலாகாத பெருங் கொடையை அதாவது பாடலி நகரத்தை அவர் பெறுக என்றாள்.

---

3 பேருக்கு மேல் தெரியவில்லை என்றால் வளமற்ற இந்தி மொழி, மேலே குறிப்பிட்ட பல வகை எதிர்ப்புக்கிடையில் எப்படி பொது மொழியாக வரும், நிலைக்கும் என்று தெரியவில்லை.

அப்படிப்பட்ட நிலைக்கு அதனைக் கொணர முயல்வது தவறல்ல. ஆனால் அது அந் நிலையை அவ்வளவு எளிதில் அடையுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தாய் மொழியே நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாத நாட்டில் பிரிதோர் மொழி எப்படிப் பொது மொழியாக ஆகும்; ஆக்கப்பட்டால் அதனால் நடைபெறும் ஆட்சியைத் தம் ஆட்சி என்று எப்படி மக்கள் உணர்வர்? தாய்மொழிகள் ஆட்சிக்கு வந்தபின் பொது மொழிக்கு முயல்வதே நல்லது.

—ஒளி.

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு. சென்னை 1

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)